கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - *641 003*

சர்வதேச
சிறுதானிய ஆண்டு
2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: **27.10.2025**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கடிதம் எழுதும் போட்டி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை மற்றும் கோவை வட்டார இந்திய அஞ்சல் துறை இணைந்து தேசிய கடிதம் எழுதும் போட்டியின் ஒரு பகுதியாக மாபெரும் கடிதம் எழுதும் போட்டியை வேளாண் மாணவர்களுக்கு 25.10.2025 அன்று நடத்தியது. "எனது வழிகாட்டிக்கு ஒரு கடிதம்" எனும் தலைப்பில் நடத்தப்பட்ட இம் மாபெரும் போட்டியில் வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண் பொறியியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இன்றைய டிஜிட்டல் உலகில் மாணவர்கள் மத்தியில் கையால் எழுதும் தகவல் தொடர்புக் கலையை மீண்டும் உயிர்ப்பிப்பதையும், தனிப்பட்ட கடிதங்கள் மூலம் தங்கள் உணர்வுகளையும், எண்ணங்களையும் மேம்படுத்த ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு இப்போட்டியானது மாணவர்களிடையே நடத்தப்பட்டது.

மாணவர்கள் தங்கள் அபிமானத்திற்குரிய வழிகாட்டிகளான டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம், திருப்பூர் குமரன், மகாத்மா காந்திஜீ, நேதாஜீ சுபாஷ் சந்திர போஸ், தத்தமது பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் அவர்களை ஊக்கப்படுத்திய பலருக்கு கடிதம் எழுதி தங்களது மரியாதையை வெளிப்படுத்தினர்.

மாணவர் நல மைய முதன்மையர் முனைவர். ஜெ. ராமலிங்கம் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். அஞ்சல் துறையில் மக்கள் தொடர்பு அதிகாரி திரு. கி. வெங்கட சுப்ரமணியன், லாலிரோடு அஞ்சல் அதிகாரி ந. பிரவீனா, லாலிரோடு அஞ்சல் கிளை ஊழியர்களும், வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாணவர் நல மையத்தைச் சார்ந்த ஆங்கிலப் பேராசிரியர் முனைவர். கி. தங்கராஜ் மற்றும் நாட்டு நலப் பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். வெற்றிவேல்காளை ஆகியோர் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் 1051 மாணவ, மாணவியர் தங்கள் வழிகாட்டிகளுக்கு எழுதிய கடிதங்களை அஞ்சல் துறையினரிடம் சமர்ப்பித்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலா்**